# களஆய்வு!

கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அறிவிப்பின்படி நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கீழ்கண்டவாறு கள ஆய்வு நடைபெறுகிறது. இதில் மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் - திருமதி. ஈரோடு ஜெ. வீரமணி ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

| தேதி | கழக மாவட்டம் | தொகுதி | மாவட்டச் செயலாளர் |
|---|---|---|---|
| 19.05.2026 | சங்கராபுரம் | கள்ளக்குறிச்சி வடக்கு | தா. உதயசூரியன் |
| 20.05.2026 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி தெற்கு | வசந்தம் க. கார்த்திகேயன் |
| 21.05.2026 | ரிஷிவந்தியம் | | |
| 22.05.2026 | உளுந்தூர் பேட்டை | கள்ளக்குறிச்சி வடக்கு | தா. உதயசூரியன் |
| 23.05.2026 | விழுப்புரம் | விழுப்புரம் மத்திய | டாக்டர் இரா. லட்சுமணன் |
| 24.05.2026 | வானூர் | | |
| 25.05.2026 | செஞ்சி | விழுப்புரம் வடக்கு | செஞ்சி கே. எஸ். மஸ்தான் |
| 26.05.2026 | மயிலம் | | |
| 27.05.2026 | திண்டிவனம் | | |
| 30.05.2026 | விக்கிரவாண்டி | விழுப்புரம் தெற்கு | டாக்டர் பொன். கௌதம சிகாமணி |
| 31.05.2026 | திருக்கோயிலூர் | | |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 17.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# கோடியக்கரையில் தொடர்ந்து கடல் சீற்றம்!

வேதாரண்யம், மே.18-

நாகை மாவட்டம், வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை, ஆறுகாட்டு துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், மணியன்தீவு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் கடல் பகுதியில் பலத்த காற்று வீசி கடல் சீற்றமாக காணப்பட்டது.

மேலும், வானிலை ஆய்வு மையமும் கடலில் காற்று வீசக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைபர் படகு மீனவர்கள் 2து நாளாக கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

ஒரு சில மீனவர்கள் கரையோரம் பைபர் படகு மூலம் மீன்பிடிக்க சென்ற நிலையில் காற்று அதிகமாக வீசியதால் உடனடியாக கரை திரும்பினர்.

மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் 1000க்கும் மேற்பட்ட பைபர் படகுகள் கரையோரம் பாதுகாப்பாக நிறுத்தி வைத்துள்ளது.

## தலைமைக் கழகப் பேச்சாளர்

# சேப்பாக்கம் வேதா உதயசூரியன் மருத்துவமனையில் அனுமதி!

சென்னை, மே.18-

தலைமைக் கழகப் பேச்சாளரும் சேப்பாக்கம் பகுதிக் கழக இலக்கிய அணி அமைப்பாளருமான சேப்பாக்கம் வேதா உதயசூரியன் உடல்நலக்குறைவினால் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சென்னை (மேற்கு) மாவட்ட தலைமை கழக மாநில பேச்சாளர் மற்றும் சென்னை சேப்பாக்கம் பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் சேப்பாக்கம் வேதா உதயசூரியன் கடந்த வியாழக்கிழமை (14.5.2026) அன்று மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இவரை கழகத்தினர் சந்தித்து நலம் விசாரித்தனர்.

## கழகத் தோழர்

# பெருங்களத்தூர் கே.ரவி மறைவு! கழகத்தினர் அஞ்சலி!

தாம்பரம், மே.18-

காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 61 வது வார்டு அவைதலைவரும் முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கே.இரவி அவர்கள் நேற்று 15.05.2026 அதிகாலை காலமானார்.

அன்னாரின் உடலுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சருமான தா.மோ. அன்பரசன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் திருமதி கிருத்திகாதேவி, மண்டல குழு தலைவர் டி.காமராஜ், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர்,

பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், தலைமை பொது குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர், வட்ட கழக செயலாளர்கள் ஆர்.மஞ்சுநாதன், கே.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

## செஞ்சியில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற

# நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்!

## கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் உரை!

செஞ்சி. மே. 18–

இந்தியா முழுவதும் நீட் தேர்வையே முற்றாகரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்செஞ்சிஅஞ்சல் நிலையம் எதிரி இன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திராவிட மாணவர் கழகத்தின்மாநில செயலாளர் இரா.செந்தூர பாண்டியன் தலைமை தாங்கினார்.

திராவிடர் கழகத்தின் விழுப்புரம் மாவட்ட தலைவர் கோபன்னா, மாவட்ட செயலாளர் அரங்க பரணிதரன், மாவட்ட பகுத்தறிவு அணி தலைவர் துரை. திருநாவுக்கரசு, திராவிடக் கழகத்தின் மாவட்ட துணைத் தலைவர் க. திருநாவுக்கரசு,துணை செயலாளர் ரமேஷ் ,செஞ்சி நகர செயலாளர் நந்தகுமார் ஆகியோர் முன்னிலை வித்தனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயலாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்,விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் துரை. ரவிக்குமார், திராவிட கழகத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்தநாடு இரா. குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டு நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி கண்டனஉரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள்நீட் தேர்வு தொடர்பாக தேசிய மருத்துவ ஆணைய சட்டம் 2019 ன் 14ஆம்பிரிவினை திருத்தி இந்திய அரசியலமைப்பின் பிரிவு 123 என் படி ஓர் அவசர சட்டத்தை இயற்றிட வேண்டும்என ஒன்றிய பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த வகையில் 2026 27 கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வினை ரத்து செய்து பள்ளி பொதுத்தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மாநில அரசுகளே மருத்துவப் படிப்புக்கான இடங்களை நிரப்ப அனுமதிக்க வேண்டும்என வலியுறுத்திய கழகத் தலைவர் முறைகேடுகளின் முழு உருவமாக சமூக அநீதியின் சின்னமாக இருக்கும் நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு முறை கேட்டால் நாடு முழுவதும் ரத்து செய்யப்பட்டு 23 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆரம்பத்திலிருந்து மோசமான நீட் தேர்வு முறையை அகற்ற அனைத்து வழிகளிலும் தமிழ்நாடு போராடிவரும் நிலையில் ஒன்றிய அரசு எதனையுமே கருத்தில் கொள்ளவே இல்லை. இனிமேலாவதுஒன்றிய அரசு இந்த பாரபட்சமான நீட் தேர்வை கைவிட வேண்டும் இல்லையெனில் மாணவர்களின் நலனை காத்திட மாநிலத்தின் உரிமைகளை பாதுகாத்திட எந்த எல்லைக்கும் சென்று திமுக கழகம் போராடும் ஜனநாயகத்தை காத்திடும்என முதலமைச்சர் தெரிவித்ததை வலியுறுத்தி பேசிய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் இந்த ஆண்டும் நீட் பேப்பர் லீக் முறைகேடுகள் வெளிவந்து தேர்வு ரத்து செய்யப்பட்டு லட்சக்கணக்கான மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்காங்க. ஒரு தேர்வின் ஒவ்வொரு படிநிலையிலும் மோசடி நிறைந்ததாகவே நீட் தேர்வு உள்ளது. ஆண்டுதோறும் மாணவர்களின் வாழ்க்கையோடும், மாநிலம் மருத்துவக் கட்டமைப்பின் எதிர்காலத்தோடு மக்களின் உயிரோடு விளையாடும் நீட் தேர்வு முறையை ஒழிக்கப்படணும். மீண்டும் நீட் தேர்வு நடத்தினால்மாணவர்களின் உயர்கல்வி கனவில் குழப்பங்களைத்தான் ஏற்படுத்தும். அதனால் பழைய படி பிளஸ் 2 மதிப்பெண்களின் அடிப்படையிலேயே எம்பிபிஎஸ் இடங்களை ஒதுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் புதிதாக அமைந்திருக்கும் அரசு நீட் தேர்வுக்கு எதிரான தனது உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விளக்கு கோரும் திராவிட மாடல் அரசின் சட்ட நடவடிக்கைகளை புதிய அரசு கையில் எடுத்து நம் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என தெரிவித்த மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் ஒன்றிய அரசால் நிர்ணயம்செய்யப்பட வேண்டிய ஐஏஎஸ் அதிகாரிகள்எண்ணிக்கை 6877 பேர்,ஆனால் இதில் பணி நியமனம் செய்தது 5576நபர்கள். இதில்ஓ பி சி 245 நபர்கள், எஸ்சி 135 நபர்கள், எஸ்.டி. 67 நபர்கள். மீதமுள்ள 92% பார்ப்பணர்கள் தான்இந்திய நாட்டை ஆளும் ஐஏஎஸ் அதிகாரிகளாக உள்ளனர்.

இதேபோல்ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய 5099ஐபிஎஸ் அதிகாரிகளில் 4594 பேர்பணி நியமனம் செய்துள்ளனர் 254 நபர்கள் ஓ பி சி பிரிவிலும் எஸ் சி பிரிவில் 144 நபர்களும், எஸ்டி பிரிவில் 30 நபர்களும்பணி நியமனம் செய்துள்ளனர். மொத்தமாக பத்து சதவீதம் தான் பணி நியமனம் செய்துள்ளனர் மீதும் உள்ள 90% பார்ப்பனர்கள் கையில் தான் உள்ளது. இதே போல் ஐஎஃப்எஸ் பிரிவில் 3113அரசால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் ஆனால் 2165நண்பர்கள் மட்டும்தான் பணி நியமனம் செய்துள்ளனர் இதில் ஓபிசி பிரிவில் 231 நபர்களும், எஸ் சி பிரிவில் 95 நபர்களும், எஸ்டி பிரிவில் 48 நபர்களும் பணி நியமனம் செய்துள்ளனர் மீதும் உள்ள 84 சதவீதம் பார்ப்பனர்கள் கையில் உள்ளது. இதேபோல் நீதித்துறையில் 33 நீதிபதிகளில் 18நபர்கள் பார்ப்பனர்கள் ,ஓ பி சி பிரிவில் நான்கு நபர்கள், எஸ் டி, எஸ் சி பிரிவில் இரண்டு நபர்களும், கீழமை நீதிமன்றங்களில்ஓ பி சி யில் 85சதவீதமும்,எஸ்சி எஸ்டி பிரிவில் 12 சதவீதமும் பார்ப்பனர்களுக்கு 5% என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதனால் தான் திராவிட இயக்கங்கள் நாடு ஆளக்கூடாது என துடிக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு இந்தியாவிற்கு சிம்ம சொப்பனமாக இருந்து வருகிறது 90 சதவீதம் அரசு உயர் பதவிகளை பார்ப்பவர்களுக்கு அள்ளிக் கொடுத்து உள்ளது ஒன்றிய அரசு ஆனால் திராவிட இயக்கங்கள் அதனை நமக்கு கொண்டு வந்துசேர்த்து வருவதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பழங்குடி மக்கள் முன்னணியின் நிறுவனர் சுடரொளி சுந்தரம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் செஞ்சி சிவா,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், சிபிஐஎம் கட்சியின் வட்ட செயலாளர் ஆல்பட் வேளாங்கண்ணி, பெரியார் சாக்ரடீஸ் உள்ளிட்ட மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்ட தி.க.சார்பில் ஒன்றிய அரசு நீட் தேர்வை ரத்து செய்ய கோரி தி.க.செயலாளர் தலைமையில் நடைபெற்ற கண்டண ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் சிறப்புரை ஆற்றினார். இதில்முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன்,ஒன்றிய கழக செயலாளர்கள் பெ.மந்தக்காளை, திருமலை முத்துராமலிங்கம்,துரை.ராஜாமணி, யோக.கிருஸ்ணகுமார்,வே. ஆரோக்கியசாமி,ஆர்.எம்.கென்னடி,வே.தமிழ் மாறன், கா.வெங்கட்ராமன், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் உரை உணர்த்தும் பாடமும் - படிப்பினையும்!



புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப்பேரவையில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் 'உதயநிதி ஸ்டாலின்' அவர்கள் "சனாதன தர்மம்" குறித்து வெளிப்படுத்திய கருத்தினை எதிர்த்தும், விமர்சித்தும் பாரதிய ஜனதாக் கட்சியின் இன்றைய மாநிலத் தலைவர் நைனார் நாகேந்திரன் அவர்களும், முன்னாள் தலைவர் அண்ணாமலை அவர்களும் பா.ஜ.கவின் செய்தித் தொடர்பாளர் நாராயண திருப்பதி அவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள் ளார்கள்.

"சனாதன தர்மத்தின் அடிப்படை என்பது "தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனும் "புருஷார்த்தம்" ஆகும். புருஷன் எனும் ஆண் பற்றிய விஷயம் என்பதால்தான் பெயரே "புருஷார்த்தம்" என சனாதனிகள் குறிப்பிடுகின்றனர்.

இதில், பெண்களுக்கென தனியே ஒரு காரியமும் (சமஸ்காரம்), உரிமையும் இல்லை. ஆண் துணை இல்லாமல் பெண்ணிற்கு தனியே மோட்சம் இல்லை என்பதுதான் சனாதனத்தின் முடிவு. மேலும், மக்களை நான்குப் பிரிவுகளாக சனாதன நூல்கள் பாகுபடுத்துகின்றன.

அவைமுறையே பிராமணர், சத்ரியர், வைசியர் மற்றும் சூத்திரர் எனும் நான்கு வர்ணங்கள். பெண்களுக்கு வர்ணம் ஏதுமில்லை. அவர்கள் எந்தவர்ணத்தில்ஆண்குடும்பத்தில்பிறக்கிறார்களோ அந்த வகைசார்ந்தப் பெண்களாக இன்றளவும் அறியப்படுகின்றனர்.

நான்கு வர்ணங்களைத் தாண்டி, வர்ணத்தைச் சாராதவர்கள் "அவர்ணர்கள்" எனும் பிரிவினையும் சனாதன நூல்கள் குறிப்பிடுகிறது. இவர்களை வர்ணமற்றவர்கள் என்றும், பஞ்சமர்கள், சண்டாளர்கள், அந்த்யஜர்கள் (பாப ஜென்மங்கள்), புலையர்கள், நிதிருஷ்டர்கள், விராத்தியர்கள் எனும் தீண்டத்தகாதவர்கள் என சனாதன நூல்கள் குறிப்பிடுகின்றன என செ.தினகர ஞானகுருசாமி அவர்கள் "சனாதனம் அறிவோம்" என்ற நூலில் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துகிறார்". ("சனாதனம் அறிவோம்" இரண்டாம் பாகம் ஆசிரியர் செ.தினகர ஞானகுருசாமி பக்கம் 10)



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

சனாதனத்திற்கான விளக்கம் இதுவென அறியப்படுகின்ற நிலையில், ஜாதி வேறுபாடுகளற்ற சமத்துவம், சகோ தரத்துவம் பெண் உரிமை களுக்காகப் போராடு வதற்காகவே தோற்று விக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இத்தகைய அடிப்படைக் கொள்கை களை புதிய அரசிற்கு வலி யுறுத்துகின்ற நிலையில் தான், இந்தக் கொள்கை களுக்குத் தடையாகவுள்ள சனாதன தர்மத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் வாதிட்டதில் எத்தகைய தவறு கண்டுள்ளார்கள் என்பதற்கு ஆதாரப்பூர்வமான உரிய விளக்கம் அவர்களது அறிக்கையில் இல்லை.

சனாதன தர்மத்தை தமிழ்நாடு பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் வலியுறுத்துவார்களேயானால், அவர்களது நோக்கம் என்பது வர்ணாசிரம தர்மத்தை மீண்டும் சனாதனக் கோட்பாட்டின் மூலம் உயிர்ப்பிப்பதற்கான முயற்சியாகத்தான் தமிழ்நாட்டு மக்கள் கருதமுடியும். பாரதிய ஜனதாக் கட்சி இந்திய ஒன்றியத்தில் எத்தகைய சித்தாந்த இலக்கு நோக்கி பயணிக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகவே புரிந்திருக்கிறார்கள். ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியின் நடவடிக்கைகள் அனைத்தும் இந்திய ஒன்றியப் பகுதியை "இந்துத்துவா" கோட்பாட்டின் அடிப்படையில் "இந்துராஷ்டிரமாக" உருவாக்கிட வேண்டும் என்பதற்கான திட்டமிட்ட முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கி றார்கள்.

அத்தகைய இலக்கு நோக்கிய பாரதிய ஜனதாக் கட்சியின் இந்த சித்தாந்த பயணத்தின் படிக்கட்டுகள்தான் "சனாதன தர்மம்" ஆகும். மனித சமூகத்தைப் பிறப்பால் பிரித்து, ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி மனிதனை மனிதன் அடிமையாக்குகின்ற காட்டுமிராண்டி கோட்பாட்டையும், பெண்களை முற்றிலும் உரிமையற்றவர்களாக ஆக்கியிருக்கின்ற சனாதன தர்மத்தையும் முற்றிலுமாக எதிர்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சித்தாந்தங்களின் எதிரொலிதான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆற்றிய உரை என்பதில் எள்ளின் முனையளவுகூட ஐயப்பாட்டிற்கு இடமில்லை. ஆம்! சனாதனத்திற்கு எதிரான உறைதான்!

திராவிட இயக்கத்தின் மூலமுழக்கத்தை சட்டமன்றத்தின் இன்றைய புதியசூழ்நிலையில், தன்னுடைய முதல் உறையிலேயே எதிரொலித்தமைக்காக, உண்மையான திராவிட இயக்கங்கள் அவரை போற்றிப் பாராட்டவேண்டும். மேலும், எதிர்க்கட்சித் தலைவரின் இந்த நிலைப்பாட்டிலும், சிந்தனையிலும் எள்ளின் முனையளவுகூட எப்பொழுதும் மாற்றம் வராது என்பதை இந்த கட்டுரையின் மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

ஆழமான நீர் நிலைகளில் நீந்தத் தெரியாதவர் அல்லது நீந்திக் கலைத்துப் போன ஒருவர் தான் உயிர்ப்பிழைப்பதற்காக, மிதக்கும் வைக்கோல் துரும்பை வாரிப்பிடிப்பதைப்போல, பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டு தலைவர்கள் தமிழ்நாட்டில் தங்களுக்கு இடமில்லை என்று தெரிந்த நிலையில், நீந்தத் தெரியாதவன் அல்லது நீந்தி நிலைகுலைந்து போனவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வைக்கோல் துரும்பை எட்டிப்பிடிப்பதைப் போல, தமிழ்நாட்டிலுள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் இந்த சனாதனப் பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கிறார்கள். காலத்தின் தாக்கத்தால் பகுத்தறிவை வளர்த்துக் கொண்டு சமூக விழிப்புணர்வை நிரம்பப் பெற்றிருக்கின்ற தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் சனாதனக் கோட்பாட்டின் துணைக் கொண்டு தமிழக பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் கரை சேர இயலாது என்பதை பகிரங்கமாக எடுத்துக் காட்டிய தேர்தல்தான் நடை பெற்று முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலாகும். இந்த சனாதனக் கோட்பாடு என்பது தமிழ் மக்க ளுடைய தொன்மை யான வாழ்க்கை நெறிக்கு முற்றிலும் முரண்பட்ட தாகும். திருவள்ளுவர் இந்தக் கருத்தை முத்தாய்ப்பாய் தன் குறள் மூலம் வெளிப்படுத்து கிறார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு இந்த சனாதன தர்மம் முற்றிலும் முரண்பட்டதுதான். எனவே, பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர்கள் சனாதன தர்மம் போன்ற முனைமுறிந்த ஆயுதங்களோடு, சித்தாந்தப் போர்க்களத்தில் திராவிட இயக்கத்தை சந்தித்தால், தொடர் தோல்விகள் என்பது பாரதிய ஜனதாக் கட்சிக்கு நிரந்தரமாகிவிடும். தமிழ்நாடு சனாதன தர்மத்தை உள்ளடக்கமாக கொண்ட பாரதிய ஜனதாக் கட்சியை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது. அதுமட்டுமல்ல, வாழ்நாள் முழுமையும் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் "இலவு காத்த கிளியாகத்தான்" என்றைக்கும் ஏமாற்றத்தோடு ஏக்கப்பெரு மூச்சோடுதான் வாழ முடியுமே தவிர சனாதன தர்மத்தை நடைமுறைப் படுத்தவியலாது.

சனாதனதர்மம்என்பது இன்றையவளர்ந்துவிட்ட சமூகச்சூழலில், ஆம்! அதுமட்டுமல்ல, அறிவியல் உச்சம்தொட்டநிலையில்செயற்கைநுண்ணறிவின் மூலம் வியத்தகு மாற்றங்கள் நிதர்சனமாகி கொண்டிருக்கும் இன்றைய அறிவியல் உலகத்தில், சனாதனத்தைப் பற்றிக் கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பது காலத்தை வீணடிக்கும் செயலாகவே மக்கள் பாரதிய ஜனதாக் கட்சியின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வார்கள்.

காலமாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு பாரதிய ஜனதாக் கட்சியினர் அறிவியல் அடிப்படையிலான வழிகாட்டுதலைப் பின்பற்றி, சமத்துவம், சகோதரத்துவம் அறிவியல் அடிப்படையிலான முன்னேற்றம் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரை உணர்த்தும் பாடமும் படிப்பினையும் ஆகும்.